NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 29 July 2018

# சிங்கப்பூர் கடற்துறையில் அதிகமான வேலை வாய்ப்புகள்

புத்தாக்கத்தையும் தொழில்நுட் பத்தையும் நோக்கிக் கடல்துறை செல்வதாக இளையர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியுள் ளார்கள்.

சிங்கப்பூர் கடல்துறை, துறை முக ஆணையம் ஏற்பாடு செய்தி ருந்த 'சிங்கப்பூர் கடல்துறை உரையாடல்' நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இவ்வருடாந்தர நிகழ்ச்சியில் இதுவரை கண்டிராத வகையில் மொத்தம் 400 உயர்கல்வி மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

சிங்கப்பூர் கடல்துறை, துறை முக ஆணையம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர் களுடன் இணைந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது இதுவே முதல் முறை.

'வருங்காலத்துக்கு ஏற்ற சிங்கப்பூர் கடல்துறையை உருவாக்கலாம்' என்பதே இவ் வாண்டுக் கருத்தரங்கின் கருப்பொருள். இதில் சுகாதார, போக்குவரத்து மூத்த துணை அமைச்சர் டாக்டர் லாம் பின் மின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அமைச்சர் உள்பட கடல்துறை, துறைமுக ஆணையத்தின் தலைமை நிர்வாகி திரு ஆண்ட்ரு டான் மற்றும் சில கடல்துறை நிபுணர்களும் கலந்துரையாடல் குழுவில் இருந்தனர்.

உரையாடலை வழிநடத்திச் சென்ற சிங்கப்பூர் தேசிய பல் கலைக்கழக வர்த்தகப் பள்ளியின் இணைப் பேராசிரியர் திரு டான் கொக் சூன், கடல் துறைப் பிரிவில் உள்ள பல்வேறு வேலை வாய்ப்புகளைப் பற்றி பேசினார்.

கடல்துறை நிறுவனங்கள் திறனை மேம்படுத்திக்கொள் ளவும் போட்டித்தன்மை பெறவும் இணையத்தளங்கள், தொழில் நுட்பம் போன்ற புதிய வழிகளில் வளர்ச்சி காணவும் கடல் போக்குவரத்து தொழில்துறை உருமாற்றத் திட்டம் எவ்வாறு உதவுகிறது என்பதைக் குழு விளக்கியது. இனி வரும் ஆண்டுகளில் சிங்கப்பூரின் கடல்துறையில் பல புதிய, திருப்திகரமான வேலை வாய்ப்புகள் அமையும்.

கப்பலை வாடகைக்கு எடுப்ப வர்கள், தரகர்கள், கடல்துறை காப்பீட்டாளர்கள், வழக்குரைஞர் கள் தவிர இப்போது தரவு ஆய் வாளர்கள், இயந்திர நிபுணர்கள், இணையப் பாதுகாப்பு வல்லுநர் கள் ஆகியோர் கடல்துறை நிபு ணத்துவ அணியில் இணைந் துள்ளார்கள்.

அதனால் சிங்கப்பூரின் கடல் துறை வழங்கும் பல்வேறு வாய்ப் புகளைப் பற்றி நிகழ்வுக்கு வந்திருந்தோர் அறிந்திருப்பார்கள் என்று டாக்டர் லாம் நிகழ்ச்சியின் நிறைவாகப் பேசினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.